# மரியாவின் ஏழு வியாகுலங்கள்

## புனித மரியன்னையின் ஏழு துயரங்களைக் குறித்து செபம்

### 1. உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவி பாயும்

(லூக் 2:35).



வியாகுல அன்னையே, உம் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்று சிமியோன் இறைவாக்குரைத்ததைக் கேட்டு மிகுந்த துயருற்றீரே. அந்தத் துயரத்தைப் பார்த்து நான் இவ்வுலக வாழ்விலேயே மித மிஞ்சிய நாட்டம் கொண்டு விடாமல், விண்ணுலக வாழ்வையும் நாடும்படி உம்முடைய திருமைந்தனை வேண்டிக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாளே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். – ஆமென்.

## 2. இயேசுவைக் காப்பாற்றும்பொருட்டு எகிப்துக்கு தப்பிச்செல்லுதல் (மத் 2:13-15).



வியாகுல அன்னையே, நீர் எரோதுக்கு அஞ்சி உம் திருமைந்தனை எடுத்துக் கொண்டு எகிப்துக்கு ஓடிப்போனபோது மிகுந்த துயருற்றீரே, அந்த துயரத்தைப் பார்த்து நான் பசாசின் தந்திரங்களுக்குத் தப்பி விண்ணுலக வழியில் தவறாமல் நடக்க உதவியருள உம்மை மன்றாடுகிறேன்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாளே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். – ஆமென்.

3. காணாமல் போன இயேசுவை கண்டடைந்தது (லூக் 2: 46).



வியாகுல அன்னையே, உம் திருமைந்தன் பன்னிரண்டு வயதில் மூன்று நாள் காணாமல் போனதால் துயருற்றீரே, அந்தத் துயரத்தைப் பார்த்து நான் பாவத்தினால் அவரை இழந்து போகாதபடிக்கு என்னைக் காப்பாற்ற உம்மை மன்றாடுகிறேன்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாளே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். – ஆமென்.

4. சிலுவை சுமந்து சென்றபோது தாயும் மகனும் சந்தித்தது.



வியாகுல அன்னையே, உம் திருமைந்தன் பாரமான சிலுவையைச் சுமந்து கொண்டு போகிறதைக் கண்டு நீர் மிகுந்த துயருற்றீரே, அந்த துயரத்தைப் பார்த்து பாவத்தினால் எனக்கு வருகிற துன்பங்களை இம்மையில் நான் பொறுமையோடு சகித்து, மறுமையில் மகிமையைப் பெற்றுக் கொள்ள உம்மை மன்றாடுகிறேன்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாளே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். – ஆமென்.

5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்டது.



வியாகுல அன்னையே, உம் திருமைந்தன் அளவற்ற வேதனைப்பட்டுச் சிலுவையிலே இறந்ததைக் கண்டு நீர் மிகுந்த துயர் கொண்டீரே, அந்தத் துயரத்தைப் பார்த்து அவருடைய திருப்பாடுகளையும் வேதனைகளையும் நான் நினைத்து நன்மரணம் அடைய உதவும்படி உம்மை மன்றாடுகிறேன்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாளே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். – ஆமென்.

6. இயேசுவின் உடலை தாய் மரியாவின் மடியில் கிடத்தியது.



வியாகுல அன்னையே, உம் திருமைந்தனுடைய திருவுடலை உமது திருக்கைகளில் வளர்த்தி அதைக் கட்டியணைத்தபோது துயர்ப்பபட்டீரே, அந்த துயரத்தைப் பார்த்து அவருடைய இறப்பின் நினைவு என் இதயத்தில் பதிந்திருக்கவும், நான் என் பாவங்களுக்காகக் கண்ணீர் சொரிந்து அழவும் வரமருள உம்மை மன்றாடுகிறேன்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாளே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். – ஆமென்.

7. இயேசுவின் உடலை கல்லறையில் அடக்கம் செய்தது (லூக்கா 23:53).



வியாகுல அன்னையே, உம் திருமைந்தனுடைய திருவுடலைக் கல்லறையில் அடக்கின பிற்பாடு நீர் மிகுந்த துயரங்கொண்டீரே, அந்தத் துயரத்தைப் பார்த்து நான் ஒருபோதும் இறைவனை விட்டுப் பிரிந்து தனிமையாய் இராதபடிக்குத் துணை செய்ய உம்மை மன்றாடுகிறேன்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாளே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். – ஆமென்.

முதல்வர்:- இயேசுக் கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெரும்படியாக

ஏனையோர்:- மிகவும் துயரம் நிறைந்த கன்னியே, உம் திருமைந்தனுடைய வாழ்விலும் சாவிலும் நீர் அழுத கண்ணீரைப் பார்த்து நாங்கள் செய்த பாவங்களுக்காக மனத்துயர் கொண்டு உமக்கு ஆறுதல் வருமளவும் நாங்கள் மனமுருகி உம்மை மன்றாடுகிறோம்.

எல்லாம் வல்ல இறைவா, தம் மகனின் சிலுவை அடியில் நின்று, அவருடைய பாடுகளில் பங்கேற்கும் அளவிற்கு மரியன்னைக்கு ஆற்றல் அளித்தீரே. நாங்கள் அந்த அன்னையோடு கிறிஸ்துவின் பாடுகளில் நாளும் எங்களை இணைத்து, அதன் வழியாக உயிர்ப்பின் வாழ்வு வாழச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.